**<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>**

**<u>MCOP.No.442/2018</u>**

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 -ஆம் நாள் ம.சா.1 திரு.E.விஜய் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.E.விஜய் | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**<u>ம.சா. 1 முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>**

முதல் தகவல் அறிக்கை **ம.சா.ஆ.**1 கணினி நகல் ஆகவும், குற்ற அறிக்கை கணினி நகல் **ம.சா.ஆ.**2 ஆகவும், மாதிரி வரைபடம் கணினி நகல் **ம.சா.ஆ.**3 ஆகவும், பார்வை மகஜர் கணினி நகல் **ம.சா.ஆ.**4 ஆகவும், விபத்து பதிவேடு கணினி நகல் **ம.சா.ஆ.**5 ஆகவும், விபத்து காரணமான ஒரு அசோக் லைலேண்ட் பயணிகள் பேருந்து அதன் பதிவு எண்.PY-01-CN.6199-ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கணினி நகல் **ம.சா.ஆ.**6 ஆகவும், டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.**7 ஆகவும், காயச்சான்றிதழ் கணினி நகல் **ம.சா.ஆ.**8 ஆகவும், மனுதாரரின் சம்பளச்சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.**9 ஆகவும், மருந்து பில்கள் (எண்ணிக்கை 6) அசல் **ம.சா.ஆ.**10 ஆகவும், தேனி ரோட்டரி சங்கத்தின் மூலம் வாங்கி கொடுத்த செயற்கை கால் பழுது ஏற்பட்டு அதனை சரிசெய்வதற்க்காக Bionic prosthetics & Orthotics India Pvt.ltd. ஆன செலவு சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.**11 (ம.சா.ஆ.9 முதல் 11 வரையிலான ஆவணங்களை 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி ஆவணங்களின்

பரிசீலணையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>2 -வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்து நடக்கும்பொழுது இரவு 11.00 மணி இருக்கும். பஸ்ஸில் கிளினராக விபத்து முன்பு நான்கு வருடங்களாக இருந்தேன். பஸ்ஸில் டிக்கட் பரிசோதரருக்கும், கிளினரருக்கும், வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். பஸ்ஸில் கிளினராக இருக்கும் நான் படிக்கட்டில் இடதுபுறமாக சாலை எவ்வாறு உள்ளது என்றும், வாகனம் வருவதை பார்த்து சொல்வது என்றால் சரிதான். நான் அந்த வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் பஸ்ஸில் புல் ஸ்டென்த் இருந்தது என்றால் இல்லை. டிபன் சாப்பிட்ட பின்பு பஸ்ஸை எடுத்து 15 நிமிடத்திற்குள் இந்த விபத்து ஏற்பட்டது. அந்த பஸ்ஸில் நான் முன்னாடி படிக்கட்டில் நின்று கொண்டிருந்தேன் என்றால் இல்லை நான் முன்னாடி சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். விபத்து நடந்ததாக சொல்லக்கூடிய இடம் வலைவான இடம் என்றால் சரிதான். விபத்து நடக்கும்பொழுது பஸ் வலைவில் திரும்பும்பொழுது நான் படிக்கட்டில் நின்றுகொண்டிருக்கும்பொழுது நானாக படிக்கட்டில் கிழே விழுந்தவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததற்கு பஸ் ஓட்டுநருக்கும் நடத்தனருக்கும் தெரியாமலேயே நடைபெற்றுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து நடந்ததற்கு பஸ் ஓட்டுநரின் அஜாக்கிரதையோ, கவனக்குறைவோ, அதிவேகமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்துக்கு முழு காரணம் நான் தான் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவை சட்டப்படி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு எனக்கு அறுகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நஷ்ட ஈடு கேட்க வேண்டுமென்றால் வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் தான் நஷ்ட ஈடு கேட்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. சாட்சி பிராமாணப்பத்திரிக்கையில் சாட்சியத்தை தவிர் சட்டத்தை பற்றி சொல்வதற்கு எந்த அறுகதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அரசு மருத்துவமனையில் தான் மருத்துவம் பார்த்தேன் என்றால் சரிதான். மருத்துவச்செலவு எதுவும் எனக்கு ஏற்படவில்லையென்றும் அதிகமாக நஷ்ட ஈடு பெற வேண்டுமென்றும் மருத்துவபில்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காலில் போட்டுள்ள செயற்கை கால் கட்டை தேனி ரோட்டரி சங்கம் மூலம் போட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அதனால் அந்த செயற்கை கால் கட்டை போட்டுள்ள தொகையை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மாதம் 15,000/- சம்பளம் என்றும் பேட்டா தினமும் 500/- பெற்று வந்ததாகவும் கூறுவது பொய்

என்று சொல்வது சரியல்ல. ம.சா.ஆ.9 சம்பளச்சான்று வழங்கியவர் மூலமாக நிரூபிக்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நிருபணம் செய்யும் பட்சத்தில் தான் அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும் இயலும் என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது நான் வீட்டில் தான் இருக்கிறேன். வேலை ஏதுவும் செய்யவில்லை. நான் கட்டை கால் பொறுத்தியுள்ளதால் அதற்கு தகுந்தாற்போல் வருமானம் ஈட்டும் என்றும் நான் விட்டில் இருப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் வேலை செய்ய முழு தகுதியற்றவன் என்றும், ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதாலும் நான் பஸ்ஸில் கிளினராக பணியாற்றி வருவதால் வேலை நேரத்தில் விபத்து ஏற்பட்டதால் அந்த வாகனத்தின் உரிமையாளர் இருந்து வேலையாள் இழப்பீடு சட்டத்தின்படி நஷ்ட ஈடு தொகை கோர வேண்டுமென்றால் சரியல்ல. இந்த 2-ம் எதிர்மனுதாரர் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. எப்படி இருந்தாலும் கேட்கப்பட்ட தொகை அதிகம் என்பதால் வழங்குவது சரியல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.